தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 32/2024 | சாட்சியம் | **:** | **WW1** |
| **Name** | **:** | திருமதி.மணியம்மாள் | | | |
| **Date** | **:** | **24.09.2025** | | | |
| **Time** | **:** | **11.10.m to 11.13 a.m** | | | |

தொ..த.சா.1.திருமதி.மணியம்மாள் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் Helper வேலை செய்து வந்தேன். பிரமாண வாக்குமூலம் சாட்சியத்தில் நான் 14.02.1999 அன்று வேலைக்கு சேர்ந்ததாக கண்டுள்ளது என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்திருக்கும் தொ.சா.ஆ.1ல் ஆவணத்தில் 18.01.1995 என கண்டுள்ளது என்றால் ஆமாம். நிர்வாகம் என்னிடம் சில ஆவணங்களில் கையெழுத்து கேட்டதாகவும் அவ்வாறு கையெழுத்து போட நான் மறுத்ததாகவும் சொல்லி உள்ளதற்கு ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? என்றால் இல்லை. சமரச அலுவலர் முன் நடந்த விசாரணையின் போது எதிர்மனுதாரர் நிறுவனம் சார்பில் மீண்டும் வேலைக்கு வர சொன்னதன் பேரில் வேலைக்கு போனேனா என்றால் இல்லை அவர்கள் வாய்மொழியாக தான் சொன்னார்கள் எழுத்து மூலமாக கேட்டோம் தரவில்லை அதனால் போய் சேரவில்லை. தன்னுடைய

கடிதத்தில் சமரச அலுவலர் நிர்வாகம் சொன்னதை எழுதி இருக்கும் பொழுது அவர் தவறாக எழுதியதாக சொல்கிறேனா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பின்னர் வேலைக்கு வர சொல்லி சொல்லியும் போகாத காரணத்தினால் நாங்கள் வேண்டுமென்று வேலைக்கு போகாமல் இருப்பதாக எடுத்துக் கொள்ளலாமா என்றால் எழுத்து மூலமாக வேலைக்கு வர சொல்லி சொல்லவில்லை. தொழில் நலிவுற்ற காரணத்தினால் நிறுவனம் மூடப்பட்டு விட்டது என்றால் தெரியாது. நிர்வாகம் என்னை பணிநீக்கம் செய்தது என காட்ட ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் மட்டும் தான் உள்ளது. நிர்வாகம் என் சம்பளத்தில் பிடித்தம் செய்திருப்பது சம்பந்தமாக சொல்லி உள்ள சங்கதிகளுக்கு ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. என்னுடன் வந்த சக தொழிலாளர்களின் பெயர் தனபால், பாபு, ஜான்பாஷா, ரவி. பிரமாண வாக்குமூலத்தில் தவறான தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்றால் சரியல்ல.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.09.25 18:32:20 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:24.09.2025.